DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THENI
C.C.No.139/20

Deposition of Witness: PW 2

| | |
|---|---|
| Name திருவரங்கன் | Father's Name |
| Village | Taluk |
| Caste | Calling |
| Religion | Age |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.08.2022

அரசு தரப்பில் முதல் விசாரணை

நான் பிசிபட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டீக்கடை வைத்து நடத்தி வருகிறேன். எதிரியை தெரியாது. அசா1 தெரியும். 21.11.19 அன்று சுந்தரம் வாட்டார் டேங்க் அருகே வடக்கிலிருந்து தெற்காக இருசக்கரவாகனத்தில் வந்தார். அவர் வாட்டர் டேங்க் அருகே புல் அறுக்க போவார். அந்த சமயத்தில் கையை காட்டி சைகை செய்து இண்டிகேட்டர் போட்டு வந்தார். அந்த பக்கமாக இருந்து வந்த பேருந்து அடித்துவிட்டது. அவரை டிவைடருடன் சேர்ந்து பஸ் அடித்துவிட்டது. அவருக்கு முன் மற்றும் பின் தலையில், கை,கால்களில் அடிப்பட்டுவிட்டது. தலையில் இரத்தம்காயம் இருந்தது. நான் ஜெயராம், ஈஸ்வரன் ஆகியோர் சேர்ந்த 108 ஆம்புலன்ஸ் போன் செய்து வரவழைத்து தேனி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதற்கு பின்பு அவரை மதுரைக்கு கொண்டு சென்றதாகவும், 23 ம் தேதி இறந்துவிட்டதாகவும் கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை

அசா1 ம் அவர் தகப்பனார் சுந்தரமும் எனக்கு நன்கு பழக்கம் என்றால் பழக்கம்இ ல்லை ஆனால் தெரியும். பிசிபட்டி டூ கம்பம் ரோட்டில் எனது டீக்கடை எந்த பக்கம் அமைந்துள்ளது என்றால் ரோட்டிற்கு கிழக்கும் பக்கம் அமைந்துள்ளது. விபத்துநடந்த ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். மேற்படி ரோட்டில் அதிகமான வாகன போக்குவரத்துஇருக்கும் என்றால் சரிதான். சுந்தரம் அவர் வீட்டிலிருந்துபிசிபட்டி ரோட்டை கடந்து வரவேண்டும் என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் ஹரிதாஸ் வீடு என்று காட்டப்பட்டுள்ள வீடு தான் நான டீக்கடை வைத்திருக்கும் இடமாகும். எனக்கு கடைக்கு முன்பாக தான் வாகனங்கள் கடப்பதற்கு ரோட்டில் இடைவெளி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி இடைவெளியில் சுந்தரம் கிழக்கிலிருந்து மேற்காக ரோட்டை கடந்தார். ரோட்டை கடக்கும் போது இருபக்கமும் வாகனங்கள் வருகிறதா என்பதை கவனித்து கடக்கவேண்டும் என்றால் சரிதான். வாகனங்கள் வரும் சமயத்தில் ரோட்டை கடந்தால் விபத்து ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான். சுந்தரம் ரோட்டை கிழக்கிலிருந்து மேற்காக கடக்கும் போது டிவைடரில் மோதி காயம்பட்டது என்றால் சரியல்ல. பேருந்து வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வந்துக்கொண்டிருந்தது. சுந்தரம் தார் ரோட்டில் சென்றுக்கொண்டிருந்தார. சுந்தரமும் வடக்கிலிருந்து தெற்காக தான் வந்தார். வலது பக்கம் திரும்பி ரோட்டின் மறுபக்கம் செல்லவேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு வலது பக்கம் திரும்பி செல்லும் போது பின்பக்கம் வாகனம் வருகிறதா என்பதை பார்த்து சென்றால் தான் விபத்து ஏற்படாமல் தடுக்கமுடியும் என்றால் சரிதான். அவ்வாறு வாகனம் பின்னால் இருந்து வந்ததை பார்த்து சுந்தரம் வாகனத்தை நிறுத்தியிருந்தால் விபத்து ஏற்பட வாய்பபில்லை என்றால் சரியல்ல. சுந்தரம் அஜாக்கிரதையாகவும், கவனக்கறைவாகவும் சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. விபத்து ஏற்பட்ட சத்தம் கேட்டு தான் நான் சென்று பார்த்தேன் என்றால் விபத்தை ஏற்படுத்திவிட்டு பேருந்து அரைகிலோமீட்டர், ஒரு கிலோ மீட்டர் தள்ளி சென்றுநின்றது. தார்ரோட்டின் கிழக்கு பக்கமாக விபத்து நடந்தது என்றால் சரிதான். சுந்தரம் என்பவர் எனக்கு தெரிந்தவர் என்பதால் நான் அவருக்கு சாதகமாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல.